

ஶ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

நான்காம்பத்து

---

3-ஆம் திருமொழி - உருப்பிணிநங்கை

_______*________

* உருப்பிணிநங்கைதன்னைமீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற *
@ உருப்பனையோட்டிக்கொண்டிட்டு உறைத்திட்டஉறைப்பன்மலை *
பொருப்பிடைக்கொன்றைநின்று முறியாழியும்காசும்கொண்டு *
விருப்பொடுபொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே. (1)

கஞ்சனும்காளியனும் களிறும்மருதும்எருதும் *
வஞ்சனையில்மடிய வளர்ந்தமணிவண்ணன்மலை *
நஞ்சுமிழ்நாகமெழுந்தணவி நளிர்மாமதியை *
செஞ்சுடர்நாவளைக்கும் திருமாலிருஞ்சோலையதே. (2)

மன்னுநரகந்தன்னைச் சூழ்போகிவளைத்தெறிந்து *
கன்னிமகளிர்தம்மைக் கவர்ந்தகடல்வண்ணன்மலை *
புன்னைசெருந்தியொடு புனவேங்கையும்கோங்கும்நின்று *
பொன்னரிமாலைகள்சூழ் பொழில்மாலிருஞ்சோலையதே. (3)

மாவலிதன்னுடைய மகன்வாணன்மகளிருந்த *
காவலைக்கட்டழித்த தனிக்காளைகருதும்மலை *
கோவலர்கோவிந்தனைக் குறமாதர்கள், பண்குறிஞ்சிப் *
பாவொலிபாடிநடம்பயில் மாலிருஞ்சோலையதே. (4)

பலபலநாழம்சொல்லிப் பழித்தசிசுபாலன்தன்னை *
அலவலைமைதவிர்த்த அழகன்அலங்காரன்மலை *
குலமலைகோலமலை குளிர்மாமலைகொற்றமலை *
நிலமலைநீண்டமலை திருமாலிருஞ்சோலையதே. (5)

பாண்டவதம்முடைய பான்சாலிமறுக்கமெல்லாம் *
ஆண்டுஅங்குநூற்றுவர்தம் பெண்டிர்மேல்வைத்தஅப்பன்மலை *
பாண்தகுவண்டினங்கள் பண்கள்பாடிமதுப்பருக *
தோண்டலுடையமலை தொல்லைமாலிருன்சோலையதே. (6)

கனங்குழையாள்பொருட்டாக் கணைபாரித்து * அரக்கர்தங்கள்
இனம்கழுவேற்றுவித்த எழில்தோளெம்மிராமன்மலை *
கனம்கொழிதெள்ளருவி வந்துசூழ்ந்துஅகல்ஞாலமெல்லாம் *

இனம்குழுவாடும்மலை எழில்மாலிருழ்சோலையதே. (7)

எரிசிதறும்சரத்தால் இலங்கையினை * தன்னுடைய
வரிசிலைவாயில்பெய்து வாய்க் @ கோட்டம்தவிர்த்துகந்த
அரையனமரும்மலை அமரோடுகோனும்சென்று *
திரிசுடர்சூழும்மலை திருமாலிருன்சோலையதே. (8)

கோட்டுமண்கொண்டிடந்து குடங்கையில்மண்கொண்டளந்து *
மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடும்விமலன்மலை *
ஈட்டியபல்பொருள்கள் எம்பிரானுக்கு # அடியுறையென்று *
ஓட்டரும்தண்சிலம்பாறுடை மாலிருஞ்சோலையதே. (9)

* ஆயிரம்தோள்பரப்பி முடியாயிரம்மின்னிலக *
ஆயிரம்பைந்தலைய அனந்தசயனன்ஆளும்மலை *
ஆயிரமாறுகளும் ச்னைகள்பலவாயிரமும் *
ஆயிரம்பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே. (10)

* மாலிருஞ்சோலையென்னும் மலையையுடையமலையை *
நாலிருமூர்த்திதன்னை நால்வேதக்கடலமுதை *
மேலிருங்கற்பகத்தை வேதந்தவிழுப்பொருளின் *
மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன்விரித்தனனே. (11)

அடிவரவு : உருப்பிணி கஞ்சன் மன்னு மாவலி பலபல பாண்டவர் கனம் எரி கோட்டு ஆடிரம் மாலிருஞ்சோலை நாவகரியம்.